Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 22-12-1945 மார்கழி ழீ 8உ { மலர் 11

## விஞ்ஞான அறிவு—லட்சிய உணர்ச்சி கொடிக்குத் தேவை

### பெரியார் பேருரை

—●—

திருவத்திபுர மாநாட்டு நிகழ்ச்சிகள்

வடஆற்காடு ஜில்லா முதலாவது திராவிடர் கழக மாநாடு திருவத்திபுரத்தில் 9-12-45ம் தேதி நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு ஏராளமான பிரதிநிதிகள் ஜில்லாவின் பல பாகங்களிலிருந்து வந்திருந்தார்கள். மாநாட்டின் தலைவர் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் 8-12-45ம் தேதி இரவே வந்து விட்டார். மாநாட்டில் கொடியேற்ற அழைக்கப்பட்டிருந்த பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 9-12-45ம் தேதி காலை காட்பாடியில் இறங்கி, வேலூர் தோழர் திருநாவுக்கரசு அவர்கள் இல்லத்தில் காலை உணவு அருந்தி விட்டு வேலூர் தோழர்களுடன் பஸ்ஸில் திருவத்திபுரம் புறப்பட்டார்கள்.

ஆற்காட்டிற்கு பெரியார் அவர்கள் ஏறிவந்த பஸ் வந்ததும் அவ்வூர் முஸ்லிம் லீக் தலைவர் மலர் மாலை அணிவித்து வரவேற்று சிற்றுண்டி அளித்தார். பின் காலை 9 மணிக்கு பஸ் திருவத்திபுரம் வந்து சேர்ந்தது. மாநாட்டு வரவேற்புக்கமிட்டி யாரும், மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளும் வரவேற்றார்கள்.

ஊர்வலம்

மாநாட்டுத் தலைவரையும், பெரியாரையும் குதிரை சாரட்டில் வைத்து கறுப்புசட்டைப்படை தொண்டர்கள் அணிவகுக்க ஆயிரக்கணக்கான மக்கள் பின் தொடர ஊர்வலம் புறப்பட்டது. பெரியார் அவர்களுக்தும், தோழர் வேதாச்சலம் அவர்களுக்கும் கறுப்புத்துணி மாலைகளும், மலர் மாலைகளும் போடப்பட்டன. 9-30 மணிக்கு ஆரம்பிக்கப்பப்பட்ட ஊர்வலம் 11 மணி வரையிலும் பல தெருக்கள் வழியாகச் சென்றது. ஒவ்வொரு தெருவிலும் தலைவர்கட்கு மாலைகள் அணிவித்து குளிர்ந்த பானங்களும் கொடுக்கப்பட்டன. ஊர்வலத்தின்முன் யானைகளும், பலவித வாத்தியங்களும் சென்றன. இயக்கத் தோழர்கள் ஒலித்த வாழ்த்தொலிகள் வானத்தைப் பிளக்கும் வண்ணமிருந்தன.

காங்கரஸ்காரர்களின் கேவல புத்தி

மாநாட்டிற்கு வந்திருந்த ஏராளமான கூட்டத்தைக்கண்டும், உணர்ச்சி மிக்க ஊர்வலத்தைக்கண்டும் திருவத்திபுரத்திலிருக்கும் சின்ன புத்தியும், கேவல மனப்பான்மையும் கொண்ட இரண்டொரு காங்கரஸ் கூலிகள் பெரிய மூவர்ணக்கொடியை நீளமான கயிற்றில் கட்டி ஊர்வலம் வரும் ரோட்டில் நீளமாகப் பிடித்துக்கொண்டார்கள். இதையறிந்த திராவிடத் தோழர்கள் மனம் நொந்து உணர்ச்சி மேலிட்டு, காங்கரஸ்காரர்களின் இழிதன்மையை எடுத்துக்காட்டி கொடியை எடுத்துவிட முயற்சி செய்தார்கள். ஆனால் காங்கரஸ்காரர்களுக்கும் திராவிடத் தோழர்களுக்கும் தகராறு வரும் போல் தெரிந்து, பெரியார் திராவிடத் தோழர்களுக்கு சமாதானம் கூறினார். ஆனால் திராவிடத்தோழர்களில் சிலர் மேற்படி கொடியை பலவந்தத்தால் அகற்றினார்கள்.

மாநாடு ஆரம்பம்

மாநாடு சுமார் 11-15மணிக்கு ஆரம்பமாயிற்று. பல தோழர்கள் இயக்க கீதங்கள் பாடினார்கள். மாநாட்டுக் காரியதரிசி தோழர் கோவிந்தன் அவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுவிட்டு பெரியார் அவர்களைக் கொடியேற்றும்படி கேட்டுக்கொண்டார்.

கொடியைப்பற்றி ஒரு முடிவு வேண்டும்

பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டுதலுக்கிடையே எழுந்து பேசியதாவது:-

தோழர்களே! நீங்கள் என்னை கொடியேற்றும்படி கேட்டிருக்கிறீர்கள். அதற்காக நன்றி செலுத்த முடியாது. ஏன்? என்னைக்கேட்டு இது செய்யவில்லை. நாம் கொடியைப்பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இப்போதுள்ள கொடி நம் நோக்கத்திற்கு உகந்ததாக இல்லை. கொடிபற்றி நம்மில் பல பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நம் தோழர்கள் கலந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதுவரை நான் யோசித்து ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். கொடியென்பது விஞ்ஞான அறிவோடு நம் லட்சியத்தைக் கிளப்பும் உணர்ச்சியூட்டும் முறையிலும் இருக்கவேண்டும். அப்படி இன்று ஒரு கட்சிக்கொடியுமில்லை.

பொதுவுடமைக் கட்சிக்கொடி

இப்போது பொதுவுடமைக்கட்சி-அதாவது கம்யூனிஸ்ட்டு கட்சியின் கொடியை எடுத்துக்கொள்ளுங்கள். அது விஞ்ஞான அறிவுக்குப் பொறுத்தமில்லாமலும், பழைய ராட்டினக்காலத்தைக் காட்டும்படியும் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்த சின்னமாகிய அரிவாளும் சுத்தியலும் இன்றையநிலைக்குப் பொருந்துமா? இன்று உலகத்தில் விஞ்ஞான அறிவு கொண்டு, மின்சாரக்கருவிகளின் துணைகொண்டு யந்திர சக்தி வேலை செய்ய வாழ்ந்து வருவதால் இந்த அரிவாளும், சுத்தியலும் பொருந்துமா? இதை பழைய காலத்தில் ராட்டினம் பொருந்தியதுபோல், பொருந்தும் காலத்திற்குத்தக்கபடி மாற்ற வேண்டாமா? அது போலவே தமிழ்க்கொடியை எடுத்துக் கொள்ளுங்கள்.

தமிழ்க்கொடி

தமிழ்க்கொடியில் மீனும், வில்லும், புலியும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அறிவுக்குப் பொருந்துமா? புலியும் வில்லும் மீனும் என்ன செய்யும். புலி கொல்லப்படவேண்டியது. மீன் சாப்பிடப்படவேண்டியது, வில் கண் காட்சிக்கு அனுப்பப்படவேண்டியது. ஆகையால் கொடி நம் குறைகளை, விளக்கும் தன்மையில் நமக்கு அறிவும் ஆத்திரமும் மானமும் கட்டுப்பாடும் ஏற்படும் தன்மையில் இருக்கவேண்டும். அந்த மக்கள் அன்

பாகவும், உண்மையோடும் போற்றிவா வேண்டும். வில்லுக்குறி எந்த அர்த்தத்தில் பொருந்தும்? பீரங்கி, வெடிகுண்டு, துப்பாக்கி, அணுக்குண்டு என்பவை போன்ற அதிசயக்கும்படியான கருவிகள் இருக்கும் போது இதற்கு ஏன் ஒரு மரியாதை தரவேண்டும்? அதுபோல்தான் காங்கரஸ் கொடி.

### காங்கரஸ் கோடி

காங்கரஸ் கொடி 3-வர்ணத்தைக் கொண்டு இருக்கிறது. இந்தியா 4-வர்ணத்தைக் கொண்டது. அதை காந்தியார் 3-வர்ணமாக்கி இருக்கிறார். க்ஷத்திரியன், வைசியன், பஞ்சமன் ஆகிய வர்ணத்தை சூத்திர வர்ணமாக்கி, முஸ்லிமை ஒருவர்ணமாக்கி 3-வர்ண இந்தியாவாக்கிவிட்டார். இதை ஒழித்து நாசப்படுத்தி நாம் ஒரு வருணமாக்கி அதை துக்க வருணமாக்கவேண்டும். வெறும் கறுப்புதான் அது!

### தாராசுக்கோடி

நமது கட்சிக் கொடியாக இருக்கும் தராசுக் கொடியும், அர்த்தமில்லாததும், காலத்திற்கேற்றபடியும் இல்லாதிருக்கிறது. இதற்கு விளக்கம் கூறுகிறவர்கள் இது நீதியை விளக்கும் சின்னம் என்று கூறுகிறார்கள். அது எப்படிப் பொருந்தும்? இன்றைய நிலையில் எதாவது ஒரு வகுப்பிற்கு அநீதி விளைந்து தானே ஆகும். அதிகமாய் இருப்பவனிடம் இருந்து பிடுங்கி ஆக வேண்டும். பாடுபடாதவனுக்கு சம பங்கு கொடுக்க முடியாது. தேவையும் இருக்காது. ஆதலால் சமத்துவமாய்க் கொடுப்பதைவிட தேவை தகுதி பார்த்து அளக்கவேண்டும். இது காலத்திற்குத் தக்கபடி மாறியாக வேண்டும். கொடியினால் மக்களுக்கு ஒரு உணர்ச்சி ஏற்படவேண்டும். நான் கடைசியாக ஒரு சிறு-விஷயம் கூறி கொடியேற்றுகிறேன்.

### பொறுமை காட்டவேண்டும்

இன்று காலை இங்கு நடந்த விஷயத்திற்கு வருந்துவதுடன், அதுபோது நானும், தலைவர் தோழர் வேதாச்சலம் அவர்களும் உங்களுடன் வந்து விட்டதற்காக நீங்கள் எங்கள் மீது வருத்தம் கொள்ளக்கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று நமது மாநாடு நடக்கும் விஷயம் தெரிந்தும், நமது ஊர்வலம் வருவதையறிந்தும் வேண்டுமென்றே கலகத்திற்காகவும், வம்பிற்காகவும் காங்கரஸ் கொடியை நாம் வரும்போது பொது ரஸ்தாவில் பிடித்தும் நம் தலையில் முட்டும்படி கட்டியும் இருந்தார்கள். மற்ற காங்கரஸ்காரர் போல்—வம்பளக்கும், காலித்தனம் செய்யும் காங்கரஸ்காரர் போல் நாமும் நடந்து கொள்ளக் கூடாது. நாம் பொறுமையுடன் அதுபோது நடந்து கொள்ளவேண்டும். அதைவிட்டு நீங்களும் அவர்களுடன் வம்பிற்கு நிற்பதென்றால் அது நாகரீகமாகாது. அம்மாதிரி காரியங்கள் நமக்கும் பொருந்தாது. நான் இருக்கும் போது நான் சொல்லியும் பிடிவாதமாக நீங்கள் அங்கு நின்று விட்டீர்கள். அவர்கள் கொடிக்குள் புகுந்து போனால் நம் மதிப்பு குறைந்தா போகிறது. அவர்களும் கொடி கட்டி நம்மை வரவேற்கிறார்கள் என்று நாம் கருதவேண்டும். இம்மாதிரி விஷயங்களில் பொறுமையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ளவேண்டும். மற்றும் நம் எதிரிகளுள்ள இடங்களில் அவர்களுக்கு எதிர்ப்பான கோஷங்கள் போடுவது கூடாது. காலையில் நீங்கள் நான் சொல்லியும் கேளாது மூவர்ணக் கொடியை ஒழிக என்கிறீர்கள். அது சரியல்ல. அது இருந்து விட்டுப் போகட்டும். நாம் ஒரு வர்ணமாக்கிவிடலாம், நம்மால் முடியும். எனவே என்மீது கோபம் கொள்ளக்கூடாதென்று கேட்டுக்கொண்டு கொடியை எற்றுகிறேன்.

### திறப்புவிழா

பின் தோழர் கே. அன்பழகன் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து சேலம் மாநாட்டிலும், திருச்சி மாநாட்டிலும், நிறைவேற்றிய தீர்மானங்கள் இப்போது அமுலில்நடந்துவருகிறதென்றும், திராவிடர்களனைவரும் பெரியார் போடும் திட்டங்களை ஏற்று நடந்து வர வேண்டும் என்றும் கூறியதுடன் சுயமரியாதை—திராவிட இயக்கங்களின் கொள்கைகளையும் விளக்கி நீண்ட சொற்பொழிவாற்றி மாநாட்டைத் திறந்து வைத்தார்.

பின்னர் வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் சி. வி. சுப்பராயன் தமது வரவேற்புரையைப் படித்தார்.

### தலைவர் பிரேரேபனை

மாநாட்டிற்கு திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி தோழர் கோவிந்தன் பிரேரேபிக்க, போளூர் தோழர் சுப்பிரமணியம் ஆமோதிக்க தலைவர் வேதாச்சலம் நீண்ட கைதட்டுதலுக்கிடையே தலைமை வகித்து சொற்பொழிவாற்றினார்.

### திராவிடநாட்டுப் படத் திறப்புவிழா

திராவிடர் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் திராவிட நாட்டுப்படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் திராவிடர்—ஆரியர் பிரச்சினைகளை விளக்கியும், திராவிடர் இழி நிலைகளைப்பற்றியும் 2மணி நேரம் விளக்கமாகப் பேசினார்.

இடை வேளை சாப்பாட்டிற்கு மாநாடு கலைந்தது.

### பிற்பகல் நடவடிக்கை

பிற்பகல் சாப்பாட்டிற்குப் பின் மாலை 4-மணிக்கு மீண்டும் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுத் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் அவசரமாக ஊர் போய்விட்டதால், தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேறின. தீர்மானங்களையொட்டி பல தோழர்கள் பேசினார்கள். பின் தலைவர் முடிவுரையுடன் காரியதரிசி நன்றி கூற மாநாடு வெற்றிகரமாக முடிவுற்றது.

---

## மறைவு

விருதுநகர் திராவிட புனருத்தாரண சங்கத்தலைவர் தோழர் இராமசாமியின் தாயார் செல்லம்மாள் இயற்கை எய்தியதை முன்னிட்டு பல சங்கங்கள் அனுதாபம் தெரிவிக்கின்றன,

• •

சீடாமங்கலம் திராவிடர் கழக சுயமரியாதை சங்க உறுப்பினர் தோழர் ராமலிங்கத்தின் தந்தை 3-12-45ல் இயற்கையெய்தியது குறித்து மேற்கண்ட கழகங்கள் அனுதாபம் தெரிவிக்கின்றன.

• •

விருதுநகரில் மறைந்த வாலிபர் மு. மீ. க. பெத்துக்கனி மெமோரியல் ஸ்போர்ட்டிங் கிளப்பில் 2-12-45ல் மேற்படியார் படத்தை திறந்து வைத்தபோது தோழர்கள் அருணாசலம், கருப்பையா முதலியோர் பேசினர். பெத்துக்கனியின் தந்தையார் கிளப்பிற்கு ரூபாய் 30 நன்கொடையளித்ததை முன்னிட்டு குடி அரசுக்கு 1 ரூபாய் அளிக்கப்பட்டது.

o o

கரூர் நமதியக்கத் தோழர் ராசமான் சகோதரரும் திராவிட மாணவத் தோழருமான கே. எஸ். தேவ் 1-12-45ல் இயற்கை எய்தினார். கருப்புக் கொடியுடன் பிரேத ஊர்வலம் நிகழ்ந்தது.

---

## அறிவித்தல்

### விற்பனைக்கும், வாடகைக்கும்

எங்களிடம் 'குடி அரசு' பதிப்பக எல்லா ஆராய்ச்சி வெளியீடுகளும் விற்பனைக்கும், வாடகைக்கும் பெற்றுக் கொள்ளலாம். புது புத்தகங்களும் வருகிறது. திராவிட மணி 24-பக்கம் கொண்ட மலர் வருகிறது. சதம் 35 பெயர்களை பதிவு செய்துகொள்க. குடி அரசு, திராவிடநாடு, திராவிடமணி, வெற்றி, உதய சூரியன் இவை பத்திரிக்கைகளுக்கு இலங்கையிலும், இலங்கை வெளிநாடுகளிலும், டிபாசிட் கட்டக் கூடிய சப் ஏஜன்சி தேவை. விபரத்திற்கு:- சோல் ஏஜன்சி:

மானேஜர், 'குடி அரசு' ஸ்டோர்,
130, முகாந்திரம் ரோடு'
கொள்ளுபெட்டி, கொழும்பு.

# புரையோடும் புண்ணுக்குப் புனுகு பூச்சா?

[சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் 15-12-45ல் நடைபெற்ற சென்னை மாவட்ட 6-வது "சுயமரியாதை" மாநாட்டில் தோழர் எம். எஸ். முத்து அவர்களின் வரவேற்புரை]

★

பெரியார் அவர்களே!

தலைவரவர்களே!!

தாய்மார்களே! தோழர்களே!!

உங்கள் அனைவருக்கும் நல்வரவேற்புக் கூறுகின்றேன். விதியை வீழ்த்தி, வீணரை விரட்டி, அடிமை வாழ்வை அறுத்தெறிந்து, மக்களை மக்களாக வாழுமாறு செய்ய இடைவிடாமல் உழைத்துவரும் வீரர்கள், இன்று சென்னை ஜில்லாவின் 6வது சுயமரியாதை மாநாட்டில் திரண்டு வந்து குழுமியிருப்பதைக் காண மகிழ்ந்து அனைவருக்கும் நல்வரவு கூறுகின்றேன்.

திராவிடத்தின் இன்றைய நிலை சமுதாயத் துறையிலாயினும் சரி, அரசியல் துறையிலாயினும் சரி, பல புரட்சிகரமான மாறுதல்களுக்கு உட்பட வேண்டியதாக இருக்கிறது. புரட்சிகூடத் தலைகீழ்ப் புரட்சியாக இருந்தால்தான் இந்நாட்டைப் பல்லாண்டுகளாகப் பற்றிப் பீடித்துள்ள பல கொடிய பிணிகளையும், ஆரியம் பயிராக்கி வைத்திருக்கும் பல விஷ விருக்ஷங்களையும் வெட்டி அடியோடு வேருடன் சாய்க்க முடியும் என்பதை நாம் அனைவரும் நன்கறிந்து, அதற்கேற்ற சந்தர்ப்பங்களைக் கண்டறியவே அடிக்கடி இவ்வாறு கூடுகின்றோம். பல முடிவுகளைச் செய்கின்றோம். அவற்றைச் செயலில் கடைப்பிடித்தும் வருகின்றோம்.

வீணர்களும் பிறரைச் சுரண்டிச் செல்வம் திரட்டுவோரும் பெருகி, அகங்காரமும் ஆணவமும் தாண்டவமாடி கொடுங்கோலாட்சி ஓங்கி வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும், பசியும் பெருகியதால் ரஷ்யாவில் சமதர்மம் தோன்ற வேண்டியதாயிற்று. அதுபோலவே, இந்தியாவில் அறியாமையை வளர்த்து, மத மூடப் பழக்க வழக்கங்களைப் பெருக்கி, சாதி சமய வேறுபாடுகளைப் புகுத்தி, ஒரு சாதிக்கோரு நீதியென் வகுத்து வைத்து, பிராமண ஆதிக்கம் கொடுங்கோலாட்சி நடத்தி வருமாறு ஆரியம் அடிகோலி விட்டிருப்பதால்தான் இங்கே சுயமரியாதை இயக்கம் தோன்ற வேண்டியது இன்றியமையாததாகி விட்டது.

பூதேவர்களின் சூழ்ச்சிகளையும், வஞ்சகச் சதிகளையும், இழி செயல்களையும், ஏகாதிபத்ய வெறியையும் அந்தக் காலத்திலேயே [illegible] நன்குணர்ந்துகொண்டு, இவர்களைக் கடுமையாக எதிர்த்துநின்ற வீரத் திராவிட மக்களைத்தான் பறையர், தீண்டப்படாதவர், ஊருக்கு வெளியே வசிக்கவேண்டியவர்கள், சண்டாளர்கள், பஞ்சமர்கள் என்னும் பலவகைப்பட்ட பெயர்களை ஆரியர்கள் சூட்டி, அடிமைகளினும் கேவலமானவர்களாய் ஆக்கி வைத்துவிட்டார்கள். வீரத்திராவிட மக்களுட் பெரும்பாலோர் நாளடைவில் பலம் குன்றிக் குறைந்து நலன்கள் தேட வழியின்றி, பிற திராவிடர்களால் கைவிடப்பட்டு, சூழ்ச்சிக்கும் சதிக்கும் ஆளாகி பேரிழி நிலையில் சிக்கித்தவித்து மீள வழி தேடித் துடிக்கும் காட்சியை நாம் இன்று கண்டுவருகிறோம். ஆரியரின் இத்தகைய கொடுமைகளைக் கட்டோடு ஒழித்து பிராமண மதமாகிய வேத தர்மத்தை ஒழித்துவிட வேண்டுமென்பதற்காகவே பௌத்த தர்மம் தோன்றியது. ஆனால் ஆரியர்களின் வஞ்சகச் சூழ்ச்சிகளுக்கு முன்னால், பௌத்த தர்மம்கூட நிலைத்து நிற்க முடியாமற் போய்விட்டது. ஆரியர்கள் செய்த சதிகளின் பயனாக, பௌத்த தர்மம் என்று ஒன்று இருந்ததா என்பது கூட இந்நாட்டு மக்களுட் பலருக்குத் தெரியாதபடி ஆகிவிட்டது.

இத்தகைய ஆரிய வஞ்சகர், வரலாற்றுக் காலத்திலிருந்து இன்றுவரை கையாண்டு வந்துள்ள முறைகள் அவ்வப்போது எவி வரும் கணைகள், செய்து வரும் சூட்சிகள் முதலியவற்றைத் திராவிட மக்களுக்குத் தெளிவாக விளக்கிக் காட்டி, இன்றுள்ள அடிமை நிலையை உணரச்செய்து திராவிடர்கள் சுயமரியாதையுடன் வாழ வழிகோல வேண்டும் என்னும் நோக்கத்துடன் தோன்றியது சுயமரியாதை இயக்கம். இது ஒன்று தான் ஆரிய சூழ்ச்சியை வெட்டிச்சாய்க்க முடியும். இதைத் தடுக்க எவராலும் முடியாது. வெள்ளத்தையும், கால முன்னேற்றத்தையும் தடுக்க யாராலாவது முடியுமா?

இத்தகைய சுயமரியாதை இயக்கம் திராவிடத்தின் தனிப்பெரும் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் இடைவிடாத உழைப்பின் பலனாக செழித்து இன்று திராவிடத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் பரவிப் பெருகி வருகின்றன.

சமூக சீர்திருத்தத்தை உயிர் நாடியாகக் கொள்ளாத எந்த அரசியல் கட்சியும் இந்நாட்டுக்குத் தேவையில்லை. இந்நாடு இருக்கும் நிலையில் அரசியல் கட்சி எதுவாயினும் சமுதாய சீர்திருத்தத்தைக் கருத்தில் கொண்டே அமையவேண்டும். அப்படியே இப்போதுள்ள பிறகட்சிகள் தம்மைக் கூறிக்கொள்ளுகின்றன வெனினும், அவை நாட்டிற்கேற்பட்டுள்ள புண்ணின் முடை நாற்றத்தை புனுகு பூசி மறைக்கப்பார்க்கும் கட்சிகளாக இருப்பதால்தான் இந்நாட்டிற்கு ஏற்ற முறையில், புரையோடிக் கிடக்கும் புண்ணை எரிச்சல் உண்டுபண்ணும் காரமருந்துகளிட்டு ஆற்ற திறமையுடைய நேர்மையான சீர்திருத்த நோக்கங்களைச் செயல் முறையில் நடத்திக்காட்ட சுயமரியாதை இயக்கம் ஏற்று முனைந்து நின்று வேலை செய்கிறது. எனவே சுயமரியாதை இயக்கம் நாட்டின் முன்னணியில் வந்து நின்று மக்களிடை உணர்ச்சியூட்டி, ஆரிய வஞ்சக சதிகளை எதிர்க்கும் ஆற்றலையும், வீரத்தையும் அவர்களுக்குண்டாக்கி போர் முறையை மாற்றியமைத்து, வீரர்களைப் பண்படுத்தி புதிய அணிவகுப்பு முறையில் நடத்திச்சென்று வெற்றிக்கொடிநாட்டி வாகைசூடி, திராவிடம் சிறப்புற்றோங்கச்செய்ய வேண்டுமென்பது இந்த இயக்கத்தின் உள்ளக்கிடக்கையாகும்.

இது முடியுமா? புரட்சிகரமான மாறுதல்கள் நடைபெறுமா? இவை வெறுங் கனவுகள் என்கின்றனர் சிலர். பெரியார் கனவை நினைவாக மாற்றுகிறவர்; காந்தியாரைப் போன்று காலம், நிலைமை முதலியவற்றை அறியாமல், காரியத்தில் இறங்கி, பிறகு அசல் தோல்வியைத் தவிர மற்றெதனையும் காணமுடியாது போகும் தலைவரல்ல. காலம், நிலைமை, தன் வலிமை, மாற்றான் வலிமை முதலியவற்றை யறிந்து திறம்படப் படை நடத்தும் சிறந்த படைத் தலைவரைப் போன்றவர் நம் தலைவர் பெரியார். சமயம் சேரும்போது அரும்பெரும் காரியங்களைச் சாதித்து வெற்றி கண்டவர் என்பதைக் கடந்த 20 ஆண்டுகளாகத் திராவிட நாட்டு வரலாறு நன்கு விளக்கிவிடும். தோல்வித் துறைகளில் படை நடத்திப் பலி கொடுக்கும் மனப்பான்மையும், பொறுப்பற்ற தன்மையும் நம் தலைவரிடம் அறவே கிடையாது.

இறுதியாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு வார்த்தைகூற விரும்புகின்றேன். இந்நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்படைந்து தங்கள் உரிமைப் போரினை நடத்த வேண்டுமென்ற உணர்ச்சி பெற்றதற்கு காரணமாக இருந்த மூலகர்த்தா பெரியார் அவர்களே என்பதை எவரும் மறுக்கமுடியாது. பெரியார் வைக்கப்போர் நடத்தி, அதில் வெற்றி கண்டு வைக்கம் வீரரான வரலா[illegible] தாழ்த்தப்பட்ட மக்களைத் [illegible]

நடக்கக்கூடாதெனத் தடுத்த ஆணவத்தை வெட்டிச் சாய்த்ததை யன்றோ தெரிவிக்கிறது?

என் அவா, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் தாயகமாக உள்ள சுயமரியாதை இயக்கத்தில் முழுப்பங்குகொள்ள வேண்டும் என்பதே. விளக்கம் வேண்டுமா? வர்ணாச்சிரமத்தை ஒழிக்கவேண்டி போராடுகிறது சுயமரியாதை இயக்கம். வர்ணாச்சிரமம் ஒழிந்தால் சாதிபேதங்கள் ஒழிகின்றன. பிறகு பிரிவினை எது? தாழ்த்தப்பட்டோர் எது? இதைக் கொண்டே அரசியல் உரிமை மிக அவசியமென்று டாக்டர் அம்பேத்கார்கூறும் திட்டத்தை யாவராலும் புறக்கணிக்க முடியாது.

சுயமரியாதை இயக்கம் சிறு கூட்டம் என்று கேலி செய்கின்றனர் சிலர். சிறுபான்மை கட்சியினர் பெரும்பான்மை கொண்ட கட்சியை நடுங்கச்செய்து வருகின்றதை அரசியல் அரங்கங்களில் அறிந்து வருகிறோம். பெரும்பான்மையோர் என்பதாலேயே உண்மையைக் கொண்டவர் என்று அர்த்தமல்ல. சான்றாக பெரிய பாளையத்தம்மன் திருவிழாவில் நிர்வாணமாகப் பிரதட்சணம் வரும் ஆண்களும், பெண்களும் பெரும்பான்மையோர்தான். சூரியர் சந்திரர் கிரகணங்கள் பாம்பு விழுங்குவதால் ஏற்படுகின்றன வென்று மதிகெட்டு தோஷம் நீங்க கடல் நீரில் மூழ்குகின்றவர்கள் பெரும்பாலோர்தான். ஐவருக்கும்தேவி அழியாத பத்தினி என்று ஐந்து ஆண்களைக் கணவர்களாகக்கொண்ட ஒரு பெண்ணை தேவதையாகக் கொண்டாடுபவர்களும் பெரும்பான்மையோர்தான். பெரும்பான்மையோர் செய்வதால் இவை அறிவுடைய செயலாகுமா? ஆகவே, அசட்டு வார்த்தைகளை கிளப்புவோர் இனியேனும் அவற்றைவிட்டு சுத்த சுயமரியாதைக்காரர்களாய், வீரத் திராவிடர்களாய் பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில், நம் தளபதிகாட்டும் வழியில் சேர்ந்து நின்று தொண்டாற்றுவார்களாக. அத்தகைய அரிய வாய்ப்பினை, நாம் பணியாற்ற வேண்டிய முறைகளை இன்று குடந்தை வீரர் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் பெரியார் முன்னிலையில், தளபதியின் மேற்பார்வையில் நடைபெறும் இந்த மாநாடு வருத்துக் கொடுக்குமாக.

கடைசியாக உங்களனைவருக்கும் மீண்டுமொரு முறை நல்வரவுகூறி வரவேற்கிறேன்.

---

## பழனியில்!

9-12-45 காலை பழனி திராவிடர் கழகத் தலைவர் தோழர் கே. நாராயணசாமி அவர்களின் புதல்வி கோதை நாயகிக்கும், தோழர் தியாகராசனுக்கும் நடைபெற்ற புரோகிதம் ஒழிந்த திருமணத்தில் தோழர்கள் பி. சண்முகவேலாயுதம், இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, பி. என். ராமானுசம் ஆகியோர் பேசினார்கள். குடி அரசுக்கு 2ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

அன்று மாலை தோழர் மாரிமுத்து அவர்கள் தலைமையில் நடந்த திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பி. சண்முகவேலாயுதம், பி. என். இராமானுசம், மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.


## மணமகள் தேவை

25-வயதுள்ள அழகும் படிப்பும், மாதம் 50 ரூபாய் வருவாயமுள்ள நாயுடு வகுப்பைச் சார்ந்த வாலிபருக்கு 20-வயதிற்கு உட்பட்ட எழுதப்படிக்கத் தெரிந்த தன்மானப் பற்றுள்ள மணமகள் தேவை. எந்த வகுப்பாய் இருப்பினும் சரி, விதவையாயினும் சரி. விருப்பமுடையோர் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அடியிற்காணும் முகவரிக்கு அறிவித்துக் கொள்ளலாம். கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும்.

K. பாலையா,
பிராமணப் பெரிய அக்ராகாரம், ஈரோடு.



## தலைவர், தளபதி, கவிஞர் உருவப்படங்கள்

எங்களிடம் பெரியார் ஈ. வெ. ரா., தளபதி அண்ணாதுரை, திராவிடச் செல்வம் ஏ. டி. பி., கவிஞர் பாரதிதாசன், ஜனாப் ஜின்னா, மற்றும்பல தோழர்கள் போட்டோ படங்கள் தேவையான அளவுகளில் குறைந்த விலைக்குக் கிடைக்கும் வியாபாரிகளுக்கும், குடி அரசு ஏஜண்டுகட்கும் கமிஷன் உண்டு. வாசகசாலைக்கு பெரிய படங்கள் குறைந்த விலைக்குத் தரப்படும்.

பொங்கல் வாழ்த்துக்கள் தலைவர்களுடைய உருவப்படங்களுடன் அமைத்து விற்பனைக்குத் தயாரிலிருக்கின்றன.

விபரங்கட்கு ¾ அணா ஸ்டாம்புடன்:

டிரவிடியன் போட்டோ சேல்ஸ் டிபார்ட்மெண்ட்,
செலக்ட் புக்ஸ்டால், 142, கச்சேரி வீதி, ஈரோடு.



GURU

போரில் வெற்றி!
எனவே
சமாதான கால தேவைகளிலும்
வெற்றி வேண்டும்.
ஆகையால்

# குரு மருந்துகள்

இனி உங்கள் தேவைக்குக்
கிடைக்கலாம்.

முக்கிய தயாரிப்புகள்.

| | ரூ. அ.பை. |
|---|---|
| குரு தைலம் (210 வியாதிகளுக்கு) | 1—8—0 |
| குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கும்) | 0—5—0 |
| குரு களிம்பு (பத்து, படைகளுக்கு) | 0-14—0 |
| குரு ஆயுள்வேத லேகியம் | 2—0—0 |
| குரு ஆஸ்த்மா டிராப்ஸ் (இருமல் காசங்களுக்கு) | 2—0—0 |
| குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர்களுக்கும்) | 5—0—0 |
| குரு சந்தான சோர்ணம் (ஸ்திரிகள் சகல கர்ப்ப நோய்களுக்கும்) | 5—0—0 |
| குரு குழந்தை செட் (I.HILDREN SET) (குழந்தைநோய்-பாதுகாப்புக்கும்) | 8-10—0 |

## குரு மருந்துகள் குடும்ப பொக்கிஷம்

உங்கள் ஊர் மருந்து—
ஷாப்கடைகளில் கேளுங்கள்.
இல்லாவிடில்

டாக்டர்

ஏ. மதுரம் சன்ஸ்,

குரு மருந்து சாலை............
திருச்சிராப்பள்ளி (S. I.)


ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## நடக்க இருப்பவை!

★ 23-12-45 ஞாயிறன்று சென்னை வண்ணையம்பதி நெ. 5 மாடசாமி நாடார் தெரு மைதானத்தில் தோழர் சி. நாகப்பன் தலைமையில் தோழர்கள் என். ஜீவரத்தினம், பி. ஏ. கே. பழனிச்சாமி, என். எம். சுப்ரமணியம், ஆகியோர் பேசுவார்கள்.

★ 23-12-45 மாலை 6-மணிக்கு சென்னை பார்க் டவுன் பொம்மு செட்டித் தெரு 11-வது மாடியில் சென்னை சு. ம. மாநாடு—நாடகம், வரவு செலவு கணக்குப் பரிசீலனை, மற்றும் பல செய்திகள் பற்றி ஆலோசிக்க நிர்வாகக்கூட்டம் நடைபெறும். தவறாது வருக!

★ 23-12-45 ஞாயிறு மாலை 5-மணிக்கு திருநெல்வேலி நயினார் குளம் தெரு 8 நெ. கட்டிட மேடையில் திருநெல்வேலி ஜில்லா திராவிடர் கழக 2வது மாநாடு, திராவிடர் கழக ஆண்டு விழா இவை நடத்துவதுபற்றி ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

★ 23-12-45 காலை 9-மணிக்கு கும்பகோணம் அனுமார்கோயில் ரோட்டில், திருவள்ளுவர் சீர்திருத்தக் கழக ஆரம்பமும், கைவல்யம் வாசகசாலை திறப்புவிழாவும் தோழர் வி. சின்னதம்பி தலைமையில் நிகழும். பல தோழர்கள் பேசுவார்கள்.

★ 25-12-45 போளூர் சிந்தாதிரிப் பேட்டையில் பாபுலர் கம்பெனி உரிமையாளர் தோழர் மாணிக்கம் அவர்களின் தாயாரின் இறுதி நாட்கடன் நிகழ்ச்சியும் அதை யொட்டி, தளபதி அண்ணாதுரையின் "நீத்தார் கடன்" என்ற சொற்பொழிவும் நடைபெறும். தோழர்கள் இதனையே அழைப்பாகக் கொள்க!

★ 25-12-45 மாலை 6 மணிக்கு ஈரோடு டவுன் ஸ்கூல் மைதானத்தில் கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டம் நடைபெறும் என்று தோழர் ஈ. கே. ஆறுமுகம் தெரிவிக்கிறார்.

★ 24-12-45 இரவு 8½ மணிக்கு கோவை திராவிடர் கழக சார்பில் ஒரு பொதுக்கூட்டம் சாரதா பெண் பாடசாலைக்கருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெறும். அதுபோழ்து பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், தோழர்கள் நெடுஞ்செழியன், எ. சித்தையன், அன்பழகன், அழகிரிசாமி மற்றும் பலரும் கலந்துகொள்வார்கள்.

★ 29-12-45 மாலை 6-மணிக்கு வேலூர் (வ. ஆ.) திராவிடர்கழக சார்பில் கோட்டை மைதானத்தில் நடைபெறும், கூட்டத்தில் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## தஞ்சை நகர திராவிடர் கழக கட்டிட நிதிக் கமிட்டிக் கூட்டம்

18–12–45 செவ்வாயன்று தோழர் டி. எஸ். சந்தானம் தலைமையில் ஷை கழக கட்டிட நிதிக்கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டன.

(1) ஷை கழக கட்டிட நிதி வசூல் தொகையை தோழர் பி. ஜம்புலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கவேண்டியது.

(2) ஷை கழக கட்டிடம் வாங்கும்போது கமிட்டியிடம் வருலான தொகையை ஒப்புவிக்க வேண்டியது.

(3) ஷை கழக கட்டிடத்திற்கு "பன்னீர் செல்வம் ஞாபகார்த்த மன்றம்" என்று பெயரிடவேண்டியது.

## குடந்தைக் கல்லூரியில் ஆரிய அலறல்!

குடந்தைக் கல்லூரி சப்வார்டன் ஸ்ரீராமச்சந்திர அய்யரின் தூண்டுதலால் மைக்கேல் என்ற திராவிட மாணவர் ஹாஸ்டல் விடுதியிலிருந்து புலால் உண்ணும் விடுதிக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கல்லூரிக்கு மாணவர்கள் செல்லாது விடுதியில் உணவு உண்ண மறுத்து ஸ்ட்ரைக் செய்தனர். மைக்கேல் அதன்பின்னர் திரும்ப அழைக்கப்பட்டார். ஸ்ரீ ராமச்சந்திர அய்யர் திராவிட மாணவர் எழுச்சியின் ஜுவாலையின் முன் நிற்க மாட்டாது தமது சப்வார்டன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். அவருக்கு அது வெற்றிகரமான வாபஸ்தான்!

இவர்தான் பார்ப்பன மாணவருடைய தண்ணீர்ப்பானையில் திராவிட மாணவர் தண்ணீர் குடித்ததை முன்னிட்டு ரூ. 1 அபராதம் போட்டு, திராவிட மாணவர் மாநாட்டைக் குடந்தையில் கூட்டுவிக்க காரணபூதமாயிருந்தார் என்று கூறினால் "அட ராமச்சந்திரா" என்று நீங்கள் மூக்கில் விரலை வைப்பீர்கள்.

சேலம் செவ்வாபேட்டை சுயமரியாதை சங்க ஊழியர் தோழர் கே.செல்லமுத்து தங்கை, திரௌபதி என்ற தனது பெயரை 12-12-45ல் கமலா என்று மாற்றிக்கொண்டார்.


கடல்கடந்த நாடுகளில் குடியேறும்வேலை-வெற்றிக்காக போரிடுவதைவிட மிகக் கடினமாக இருக்கும்

### மே. த. கவர்னரின்

சௌகரியங்கள்—கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு மென்மேலும் நன்கொடை கொடுத்துதவுமாறு உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது.

ஏனென்றால்

இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சௌகரியங்கள் மிகமிக அவசியமாக தேவைப்படுகின்றன.

★

எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பி கொடுக்கவும்.

குடி அரசு

1945-ஆம் டிசம்பர் மீ 22-௳

# வடநாட்டு ஆதிக்கம்

திராவிடர்கள் திராவிடநாடு தனி சமஸ்தான நாடாக வேண்டுமென்று கேட்பதானது, திராவிட நாட்டையும், திராவிடநாட்டு மக்களையும் ஒரு பூரண சுதந்திர நாடாகவும், பூரண சுயேச்சையுள்ள மக்களாகவும் ஆக்கி திராவிட நாட்டின் வளப்பத்தை திராவிட மக்கள் அடையவேண்டுமென்பதற்குஆகவே ஒழிய வேறு எவ்வித காரணத்திற்கும் அல்ல என்பது இந்த 6, 7 வருடகாலமாகவே நன்றாய் விளக்கப்பட்டு வந்திருக்கிறது.

இன்று திராவிடநாடு அரசியல், பொருளியல், தொழிலியல், சமுதாயஇயல், கலைஇயல், "ஆத்மார்த்த இயல்" முதலிய சர்வமும் வடநாட்டு ஆதிக்க இயல்களாகவும், வடநாட்டார் நலத்திற்கே பெரிதும் இருந்து வருவதாகவும் நடைபெற்று வருகிறது. இந்த உண்மையை இதுவரை எவரும் மறுத்துக் கூற முடியவில்லை.

இந்த நாட்டில் இன்று உள்ள பல பொதுநல ஸ்தாபனங்களாகிய காங்கரஸ், இந்துமகாசபை, முஸ்லிம் லீக், பொதுவுடைமைக்கட்சி முதலிய விளம்பரம்செய்யப்பெற்ற ஸ்தாபனங்கள் யாவும் வடநாட்டார் ஆதிக்கத்திலும் அவர்களது அதிகாரத்திலும் ஆதரவிலுமே இருந்து வருவதாக இருக்கிறதை யார் மறுக்கமுடியும்?

இதன் பயனாய் இந்த நாட்டில் மக்களுள் இன ஒற்றுமையோ, வகுப்பு ஒற்றுமையோ, மத ஒற்றுமையோ, ஒருவருக்கொருவர் நம்பிக்கையோ இல்லாமல் போனதோடு எளிதில் அன்னியர் நம் நாட்டு வளப்பத்தை சுரண்டவும் எளிதில் நாட்டு முன்னேற்றம் தடைப்படவும் ஏற்பட்டு விட்டது.

உண்மையில் வடநாட்டு ஆதிக்க சம்மந்தம் இந்த நாட்டில் இல்லாதிருக்குமானால் இங்கு திராவிடர், ஆரியர் தகராறோ, இந்து முஸ்லிம் கிளர்ச்சியோ, அரசியல், சமுதாய இயல், மத இயல் என்பவைகளுக்கு ஆக ஒன்றுக்குமேற்பட்ட ஸ்தாபனங்களோ அன்னிய ஆட்சிக்கும் சுரண்டுதலுக்கும் எளிதான வேறு பல நிலைமைகளோ சிறிதும் ஏற்பட்டிருக்க இடமே இல்லை. ஆகவேதான் திராவிட நாடு வடநாட்டாரின் சம்மந்தமற்ற தனிநாடுஆகவேண்டுமென்கிறோம்.

இந்த நம் பிரச்சினைக்கு போதுமான விளம்பரம் இல்லாததால் இது பிரபல முக்கிய பிரச்சினையாக ஆகவில்லையே தவிர மற்றபடி இதற்கு நியாய வலிவு இல்லாமற்போகவில்லை.

எப்படிஎனில் இந்தியா என்ற உபகண்டம் கொஞ்சகாலத்திற்கு முன்பு 5, 6 மாகாணங்களாக இருந்ததானது இன்று 11 மாகாணங்களாக ஆகவும் இந்தப் பதினோரு மாகாணங்களும், 21-மாகாணங்களாக ஆகவேண்டியது அவசியம் என்று காங்கரஸ்காரர்களாலேயே திட்டமிடப்பட்டிருக்கவும் அது குறித்து இன்றும் சச்சரவுகளும் கிளர்ச்சிகளும் இருந்துவருவதும் யாவரும் அறிந்ததாகும்.

இந்த 21-மாகாணங்களுங்கூடப் போதாமல் மேலும் உட்பிரிவு ஏற்பட வேண்டுமென்ற கிளர்ச்சி இருந்து வருகின்றது. அதாவது ஆந்திரநாட்டில் ராயலுசீமா என்கின்ற 4, 5-ஜில்லாக்கள் தனி மாகாணமாக வேண்டும், என்ற கிளர்ச்சி இருந்து வருகிறது. சென்னை நகரத்தை டில்லியைப் போல் தனி மாகாணமாக ஆக்கலாம் என்ற யோசனை அரசாங்கத்தாராலேயே சொல்லப்பட்டு வருகிறது. இந்த மாதிரியாக பிரிவினை உணர்ச்சி நாட்டில் வலுப்பட்டு வருகிறது. இதற்கு ஆக்கம் கொடுப்பதுபோலவே நித்திய சம்பவங்களும் நடந்து வருகின்றன.

இன்று சென்னை மாகாணத்தைச்சேர்ந்த தமிழ்நாட்டில் காங்கரசிற்குள் ஒரு சிறு அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. அதாவதுசுமார்5, 6வருடங்களுக்குமுன் நடந்த ஒரு த. கா. கமிட்டி தேர்தலில் தோழர் ஆச்சாரியார், தோழர் சி. பி. சுப்பையா முதலியாரைத் தலைமைப் பதவிக்கு பிரேரேபித்தார், தோழர் சத்தியமூர்த்திசாஸ்திரியார், தோழர்காமராஜநாடாரைப் பிரேரேபித்தார். சத்தியமூர்த்தி ஒரு ஓட்டில் வெற்றிபெற்று காமராஜா தலைவரானார். ஆச்சாரியார் ஒரு ஓட்டில் தோல்வியுற்று சுப்பையா முதலியார் தலைவராகாமல் போய் விட்டார். இந்தப் புகைச்சல் ஒரு சாதாரண மனக்கசப்பாக த. நா. காங்கரசில் இருந்துவந்தது. ஆனால் அது இன்று பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிரச்சினையாக மாறி இதை தீர்த்துக் கொள்ள நம் நாட்டவர்கள் வடநாட்டுக்கு காவடி தூக்கவும், வடநாட்டார் ஒருவர் இதற்குஆக நம் நாட்டுக்கு சமாதானத் தூதராகவரவும், அவர் காலடியில்நம்நாட்டுகாங்கரஸ்தலைவர்களும் காங்கரஸ் தியாகிகளும், காங்கரஸ் வீரர்களும், காங்கரஸ் தொண்டர்களும் ஆயிரக்கணக்காக காத்துக்கிடக்கிறார்கள் சென்னை கன்னிமாரா ஓட்டல் வாயிலில்!

இது திராவிட நாட்டிற்கு இதுவரை ஏற்பட்டிராத ஒரு மாபெரும் மானக்கேடானசம்பவம் என்பதல்லாமல் இதில் எவ்வித தேச பக்தியோ, தேசிய தத்துவமோ இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் தோழர் ஆச்சாரியார் தனக்கு எவ்வளவு புத்தியும் தியாகமும் இருந்தும் அதைக்கொண்டு இதுவரை தமிழ்நாட்டில் தலைமைசெலுத்தாமல் வடநாட்டாரின் சலுகை கொண்டே செலுத்திவந்தார். அதன் காரணமாகவே பல உயிர்த் தொண்டர்கள் காங்கரசிலிருந்து ஓடிவிட்டார்கள். இன்றும் அதுபோலவே தோழர் காமராஜ நாடார் அவர்களும் வடநாட்டார் சலுகையைக்கொண்டே ஆச்சாரியாரை காங்கரசிலிருந்தே வெளியாக்கக்கூடிய துணிவும் வசதியும் பெற்றுவிட்டார். எனவே வடநாட்டுப் பிரவேசம், ஆதிக்கம் திராவிடநாட்டில் இல்லாதிருக்குமானால் இந்த சம்பவங்களும், இதற்கு ஆதி காரணங்களாக இருந்த சம்பவங்களும் ஏற்பட்டிருக்கவே முடியாது என்று கெட்டியாகச் சொல்லுவோம்.

ஏனெனில் "ஆகஸ்ட் சம்பவங்களுக்கும் எங்களுக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை" என்றும், "குயிட் இன்டியா(வெளியே போ) என்ற வார்த்தைக்கு வெள்ளையர் வெளியே போ என்பது அர்த்தமல்ல" என்றும், விண்ணப்பமும்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# கறுப்பு சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கறுப்பு சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள். பெண்களும் சேரலாம். ஆதலால் அதில் சேர சம்மத முள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரி விக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

வியாக்கியானமும் செய்த காங்கரசார், "இன்று ஆகஸ்ட் துரோகிகள்" பேரில் நடவடிக்கை எடுக்கவும் குயிட் இன்டியாவுக்கு விரிவுரை நிகழ்த்தவும் வடநாட்டாரின் சாமர்த்தியமும் சூழ்ச்சியும் இடம் கொடுத்ததே தவிர வேறு என்ன என்று யார்தான் சொல்லமுடியும்.

வட நாட்டாருக்கு ஆச்சாரியார் பிடிக்கவில்லை. இது இன்று நேற்றல்லாமல் 1923ம்வருடத்திலேயே பண்டித ஜவகர்லால் அவர்கள் ஆச்சாரியாரை வெறுத்து அலட்சியமாக கர்ணகடூரமாய்த் துவேஷமாகப் பேசி வருகிறவராவார். அது நாளுக்கு நாள் வளர்ந்ததுடன் பாகிஸ்தானால் வடநாட்டார் ஆச்சாரியாரை வெறுக்கும்படி ஆகிவிட்டது. இதன் பயன் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டிக்கு நல்ல ஆக்கம் கொடுத்து ஆச்சாரியாருடன் போர்தொடுக்க வசதி அளித்துவிட்டது. இதுதான் இந்தப் போராட்டத்தின் உண்மை என்றாலும் இன்று இவ்வளவு ஏற்பட்டதற்குப் பின்னும் வடநாட்டார் இதற்கு எதற்குஆக சமாதான தூதராக வரவேண்டும்? ஆச்சாரியார் நிலைமையில் காமராஜ நாடாரோ, முத்துரங்க முதலியாரோ, அல்லது டாக்டர் சுப்பராயனோ, மாட்டிக்கொண்டால் அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் இருக்குமா என்று கேட்கிறோம்.

இன்று உண்மையில் தமிழ்நாடு காங்கரஸ் ஸ்தாபனத்தில் நல்ல அளவுக்கு பார்ப்பனர் ஆதிக்கம் இல்லை என்று சொல்லலாம். தலைவர் திராவிடர், காரியதரிசி திராவிடர், காரியக்கமிட்டியில் 14-அங்கத்தினர்களுக்கு 12-பேர் திராவிடர்கள். மற்றும் காங்கரஸ் பிரமுகர்களாக ஆங்காங்குள்ளவர்களும் பெரும்பாலும் திராவிடர்களேயாவார்கள். இதற்குக் காரணம் என்ன? இது யாருடைய உழைப்பினால், தொண்டினால் ஏற்பட்டது என்பது ஒருபுறமிருந்தாலும், தமிழ்நாட்டுக்கு இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இவ்வளவு வெற்றிபெற்ற தமிழ்நாடு காங்கரஸ் வடநாட்டார் பிரவேசத்தால் சுதந்தரமற்று இருப்பதோடு பழையபடி" ஆகப்போகிறது என்பதில் சந்தேகமில்லை.

வடநாட்டார் இல்லாவிட்டால் ஆச்சாரியார் சேவை திராவிட நாட்டிற்கு இல்லாமல் போய் விடும் என்று நாம் சொல்லவில்லை. அவர் தொண்டு நமக்கு வேண்டாம்என்றும் நாம் சொல்ல வரவில்லை. ஆனால் இந்த அரசியல் சமுதாய இயல் ஆகிய இரு தொண்டுகளிலும் திராவிடநாட்டுத் தேவைகளில், காரியங்களில், வடநாட்டார் ஆதிக்கம் இல்லாமல் இருந்திருக்குமானால் ஆச்சாரியார்போன்ற அறிஞர்கள் தன்னலமற்ற (தனக்கென வாழா) பெரியோர்களால் திராவிடநாடு, திராவிட நாட்டுக்கு மாத்திரமல்லாமல் இந்தியாவிற்கே எவ்வளவோ புத்துயிர், மறுமலர்ச்சி ஏற்படும்படியான புரட்சி காரியங்கள் செய்து உலகிற்கே பிரமிக்கும்படியான வழி காட்டியிருக்கும் என்று வன்மையாகக் கூறுவோம்.

ஆச்சாரியார் பொதுவாழ்வில், பொதுத்தொண்டில் இறங்கின காலத்தில் காந்தியாரை மகாத்மாவாக்கி, அதன்மூலம் நாட்டை வசப்படுத்தி, தனது தொண்டிற்கு வகைசெய்துகொள்ளலாம் என்று கருதிய தந்திரத்தைவிட்டு உண்மையையும் அறிவையும் சூது வாதற்ற தன்மையையும், மகாத்மாவாக்கி ஒரு பயனுள்ள தொண்டில் இறங்கி இருப்பாரானால் அவர் மீது இப்போதிருக்கும் பொறாமையும் அசூயையும் அணுவளவுகூட தலைகாட்டாமல் பல உண்மைத் தொண்டர்களைத் தனக்கு சிஷ்யராய்க் கொண்ட பெரிய 'மகான்' ஆகி இருப்பார் என்பதில் ஐயமில்லை.

ஆச்சாரியார் பொதுத்தொண்டில் இறங்கும் காலத்தில், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கசப்பும் துவேஷமும் இப்போதிருப்பதில் 100ல் ஒரு பங்குகூட இல்லாமல் இருந்ததென்றேசொல்லலாம். அப்பொது பலர் பாரப்பனர் பார்ப்பனரல்லாதார் பேதம் ஏற்படக் கூடாது என்பதற்குஆகவே பாடுபட உண்மையாய் முன்வந்தார்கள். அவர்கள் எல்லோரையுமே கூட இன்று பார்ப்பன துவேஷிகளாகச் செய்து, பார்ப்பனர்களையும் "பிராமண பாதுகாப்புச்சங்கங்கள்" ஏற்படுத்தும்படியாகச் செய்ததும் தோழர்கள் ஆர். வி. கிருஷ்ணன், சர் சி.பி. ராமசாமிபோன்றவர்கள், இந்தக் காரியத்திற்கு தொண்டர்களாகத் திரியும்படி செய்ததும், ஆச்சாரியாரின் அகமும் இதற்கு வடநாட்டார் ஆக்கமும் அல்லாமல் வேறு எது காரணம் என்று கேட்கின்றோம்?

உண்மையில் ஆச்சாரியார் தொண்டு, திராவிட நாட்டிற்கு இல்லாமல் போனதானது, பண்டார சன்னதிகள்—கோவில்கள் இவைகளி

ரோஜா முத்தையா

டம் சிக்கிய கோடிக்கணக்கான ரூபாய் செல்வமும், லட்சக்கணக்கான ரூபாய் வரும்படியும் எப்படிப்பாழாய்ப் போய்க்கொண்டிருக்கிறதோ, அது போல் அவரது பார்ப்பன உணர்ச்சியால்தானே ஒழிய வேறில்லை.

பார்ப்பனர் நலத்திற்கோ அவர்களது பாதுகாப்புக்கென்றோ ஆச்சாரியார் போன்ற ஒரு மனிதன், ஒரு அறிவாளி, ஒரு தன்னல மறுப்பாளி தொண்டாற்ற இறங்குவதென்றால், கோவில் திருப்பணி, கும்பாபிஷேகம், உற்சவம் செய்வதற்கு ராஜாசர் போன்ற ஒரு கோடீஸ்வரப் பிரபு தொண்டாற்ற இறங்கினது போல் அல்லாமல் வேறு என்ன என்று சொல்லமுடியும்.

ஆச்சாரியார் காங்கரசில் தொண்டாற்றவேண்டும் என்று இன்று டாக்டர் ராஜன், தோழர் வைத்திய நாதய்யர் ஆகிய இருபார்ப்பனர்கள் தானே முக்கிய கர்த்தாக்களாக இருக்கிறார்கள் என்பதல்லாமல் இவரை வேறு யார் விரும்புகிறார்கள் என்று கேட்கின்றோம்? இவருக்குத்தான் இவ்வளவு ஆத்திரம் ஏன்? தாம் இல்லாவிட்டால் பார்ப்பன நலம் கெட்டுப்போகும் என்பதல்லாமல் இவரிடம் வேறு திட்டம் என்ன இருக்கிறது என்று கேட்கிறோம்? இவரது அறிவும் தியாகமும் இந்த அற்ப காரியத்திற்கா பயன்பட வேண்டும் என்று கேட்கிறோம்?

அதாவது கஷ்டப்பட்டுக்கொண்டு, மானமிழந்து, "ஈன" ஜாதியாய் இந்நாட்டில் வாழுகின்ற 100க்கு 90மக்கள் நலத்தைவிட்டு சுகபோகத்தில் "மேன்" மக்களாய் வாழும் 100க்கு 3 பேர்களுக்கு ஆகப் பாடுபடவா என்று கேட்கிறோம். பார்ப்பான் எக்கேடு கெட்டால் என்ன? அவனால் இந்த உபகண்டம் இவ்வளவு இழிநிலைக்கு வந்தது போதாதென்றா ஆச்சாரியாரும் இதில் இறங்குவது? பார்ப்பன சமுதாயத்தின் நிலை வெள்ளரிக்காய் மாதிரி ஆகிவிட்டது. இனி அதற்கு யார் எப்படிப்பட்ட பூண் போட்டாலும் நிற்கப்போவதில்லை. மரியாதையாக ஆச்சாரியார் அவர்கள் இனி வடநாட்டாரின் சம்மந்தத்தையே அடியோடு அறுத்து விட்டுத்தன்னை ஒரு திராவிடனாய்க்கருதிக்கொண்டு, திராவிட மக்களின் முக்கிய குறைபாடுகளைக் கண்டெடுத்து, அதற்குத் தொண்டாற்ற தனது அந்திய காலத்தைக் கழிக்க முற்படுவரானால் அவர் கண்டிப்பாக ஒரு "மகானா"க சாகக்கூடும் என்றுகூறச் சிறிதும் நமக்குத் தயக்கமில்லை. வடநாடு சம்மந்தம் ஒழியத் தகுந்த நல்ல சந்தர்ப்பத்தில் டாக்டர் ராஜன் வடநாடு சென்று குறை யிரந்து தஞ்சம் தேடிக்கொண்டு வந்ததானது மிகமிக கேவலமான காரியம் என்பதோடு அதுவும் தோழர் ஆச்சாரியார் விஷயத்தில் இப்படி அன்னிய பாதுகாப்பு தேட நேரிட்டது மகாமகா அதிசய சம்பவம் என்றே சொல்லுவோம்.

நமது திராவிட காங்கரஸ் மக்களும் இதிலிருந்து ஒரு படிப்பினை கொள்ளுவார்கள் என்றே கருதுகிறோம். திராவிட நாட்டுக் காரியங்களில் வடநாட்டார் பிரவேசம் இல்லை என்று ஏற்படுமானால், காங்கரஸ் ஸ்தாபனம் ஒன்றையே இந்நாட்டு அரசியல் சமுதாயப் பொருளாதார ஸ்தாபனமாய்க் கொண்டு தொண்டாற்றுவது யாவரும் ஒப்புக்கொள்ளலாம் என்றும், ஒப்புக்கொள்ளச்செய்து வேறு ஸ்தாபனம் எதுவும் இந்த நாட்டிற்குள் தலைகாட்டாமலும், இல்லாமலும் இருக்கச் செய்யலாம் என்றும் நாம் சொல்லி வருவதில், ஏதாவது உண்மை இருக்கிறதா இல்லையா என்பதை சிந்திக்கும்படி வேண்டுகிறோம்.

---

## ஒரு அதிசய செய்தி

தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி சம்மந்தமாய் தோழர்கள் ஆச்சாரியார், காமராஜ நாடார் ஆகியவர்கள் (பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்) தகராறை பைசல்செய்ய வடநாட்டில் இருந்து ஒரு முஸ்லிம் தோழர் ஆசப்அலி அவர்கள் சமாதான தூதராய்வரவழைக்கப்பட்டிருக்கிறார். அவர் கன்னிமாரா ஓட்டலில் தங்கியிருக்கிறார். பார்ப்பனர்களும்— பார்ப்பனரல்லாதார்களும் ஏராளமாய் அவர் வாயிற்படியில் கட்டியங் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

---

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் இந்த ஒரு மாதகாலமாக (குற்றாலத்தில் ஒருவாரமிருந்துவிட்டு) சுற்றுப்பிரயாணத்திலிருந்து 14ந் தேதிமுதல் சென்னை, காஞ்சிபுரம்,பொள்ளாச்சி முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு, 25ந்தேதி ஈரோடு வருவார். இன்று அவர் வயிற்றுக்கடுப்பால் அவஸ்தைப் பட்டாலும் பொள்ளாச்சிக்கு செல்வார். ஜனவரி முதல் வாரம்வரை ஈரோட்டிலிருப்பார். அதன்பின் திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

அம்மூன்று ஜில்லாக்காரர்களும் சேர்ந்து ஒரு சுற்றுப்பிரயாணத் திட்டம் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுகிறோம். தனித் தனி செய்துகொள்ளுவது அசௌகரியத்தைக் கொடுப்பதாகும்.

---

## தஞ்சை மாவட்ட முதலாவது கறுப்புசட்டைப் படை மாநாடு

ஜனவரி முதல் வாரத்தில் திருத்துறைப்பூண்டியில் நடைபெறும், திராவிட மாணவர் மாநாட்டன்று நடைபெறும். வரவேற்புக் குழுவிற்கு தோழர்கள் பி. எஸ். மணியம், வி. எஸ். பி. யாகூப், ஆர். சாமிநாதன், எம். கே. ஹாஜாபீர் ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், விளம்பர அதிகாரி பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தோழர்கள் தென்னன், பக்கிரிசாமி, லோகநாதன், சிவராமன், நாராயணசாமி, சரவணன் வெற்பரசன், சண்முகவடிவேலு, மோகன் ஆகியோர் அடங்கிய செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

## அடுத்தவாரம்!

சென்னையில் 15-12-45ல் நடைபெற்ற சுயமரியாதை மாநாடு, சிவாஜி நாடக நிகழ்ச்சிகளும், நிர்வாகக்கூட்ட நடவடிக்கைகளும், பெரியார் அவர்களின் வடஆற்காடு ஜில்லா சுற்றுப்பிரயாணமும் அடுத்த கிழமை வெளிவரும்.

---

போர்முனையில் தொண்டாற்றும் தோழர் ஜி. எம். மணவாளன் குடி அரசுக்கு அனுப்பிய அன்பளிப்பு ரூபாய் 1 வரப்பெற்றோம்.

ப்ச்சி நூலக அறக்கட்டளை

## மாணவர் பகுதி

திருப்பத்தூர்: திராவிட மாணவர் கழக முதலாவது ஆண்டுவிழா 30-12-45 ஞாயிறன்று தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. தலைமையில் நடைபெறும். வி. எஸ். பழனிச்சாமி முதலியார் படத்திறப்பு:- என். சுப்ரமணியம், சி. எம். துரைசாமி நாயுடு படத்திறப்பு: எம். நடேசன், கவி பாரதிதாசன் படத்திறப்பு:- க. அன்பழகன், பன்னீர்செல்வம் படத்திறப்பு: இரா. நெடுஞ்செழியன், திறப்புவிழா: கே. வி. அழகிரிசாமி, கொடியேற்றுவிழா எ. பி. சனார்த்தனம்.

அன்றிரவு "ஞானோதயம்" நாடகம் நடைபெறும். டிக்கட்: ரூ. 3-12-0, 2-6-0, 1-2-0, 0-9-0, பெண்களுக்கு தரை 0-4-6.

டிக்கட்டுகள் வி. எம். ராசமாணிக்கம், டி. எல். எத்திராசன், வாணியம்பாடி அண்ணாமலை ரயில்வே ஸ்டால், ஆம்பூர் எ. பெருமாள் ஆகியோரிடம் கிடைக்கும்.

o o

திருத்துறைப்பூண்டி: திராவிட மாணவர் கழகத்தில் 14-12-45ல் தோழர் அரங்கண்ணல் தலைமையில் நடந்த கூட்டத்தில் 1946 ஜனவரி முதல் வாரத்தில் தஞ்சை மாவட்ட 3-வது திராவிட மாணவர் மாநாட்டை திருத்துறைப்பூண்டியில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டு வரவேற்புக் கழகத்திற்கு தோழர்கள் எஸ். கருணானந்தம் தலைவராகவும், அரங்கண்ணல் செயலாளராகவும், நடராசன் விளம்பர அதிகாரியாகவும், காத்தையன் பொருளாளராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டு முழு விபரம் அடுத்த கிழமை வரும்!

o o

திருவாரூர்: திராவிட மாணவர் கழக உறுப்பினர் கூட்டம் 18-12-45ல் நடைபெற்று புது ஆண்டுக்கு தோழர்கள் சிராமுலு, தே. வெங்கிடாசலம் முறையே தலைவர், செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தோழர்கள் அரு. நடராசன், துரைசாமி, திருஞான சம்பந்தன், கோபாலன், விசயராகவன் ஆகியோர் அடங்கிய செயற்குழுவும் அமைக்கப் பெற்றது.

o o

விழுப்புரம்: 10-12-45 திங்கள் மாலை தோழர் இஸ்மாயில் தலைமையில் கடலூர் தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., திராவிட மாணவர் கழகத்தை திறந்துவைத்தார்.

---

திருப்பத்தூர் தாலுக்காவில் ஆதிதிராவிடத் தொகுதிக்கு தோழர் அனுமந்து உபாசகரும், டி. கமலாபாய் அம்மாளும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். ... முத்தையர்.

## பெண்ணுலகே புறப்படு!

(பி. விஜயலட்சுமி பெங்களூர்)

மூடநம்பிக்கையின் அடிவாரத்தில் கடவுள், மதம், புராணம், பண்டிகை என்பவைகளால் நசுக்கப்பட்டு அடிமையாக வாழும் பெண்ணுலகே! சற்று விழித்துப்பார்! திராவிடத் தோழியே! உன்னைச்சுற்றியிருக்கும் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து புறப்படு! நீ வீரத்தாய்மார் குலத்துதித்தவள்! அகமும் புறமும் உன் பெருமையை விளக்கும் பெட்டகங்கள்! அவைகளைப் படித்துப்பார்! நளாயினியும் நல்ல தங்காளும் பாஞ்சாலியும் சீதையும் உனக்கு நீதி புகட்டவேண்டாம். தீபாவளியும் கார்த்திகையும் உனக்கு திருநாட்களாக அமையவேண்டாம் அவை உன்னை அடிமைப்படுத்த ஏற்பட்ட சாதனங்கள்.

வறுமையில் உழலும் வண்டமிழ் நாட்டின் சீரழிவுக்கு அண்ணாமலை தீபங்களும், தீபாவளிப் பண்டிகைகளும், ஏகாதசிகளுந்தான் காரணம். எதையும் ஆராய்ச்சிசெய்து பார்க்கும் திறமை வேண்டும். சிந்தனை வேண்டும். மூதாதைகள் செய்தார்கள் நானும் செய்கிறேன் என்று கூறுவது அறிவுடைமையாகாது. மூதாதைகள் செய்த முட்டாள் தனத்திற்காக கடன்பட்டாவது இந்தக் கபோதிக் கொள்கைகளைக் காப்பாற்ற வேண்டுமா? ஆகவே தோழியரே! சிந்தனை செய்யுங்கள்! புராணங்களைப் புரட்டிப் பாருங்கள்! பளுகு மூட்டைகளைச் சுட்டெரியுங்கள்! அறிவை விசாலப்படுத்துங்கள்! அடிமைத்தனம் அகற்றுங்கள்! திராவிடத்தின் பெருமையைக் காப்பாற்றுங்கள்! திராவிடர் இயக்கத்திற்குப் பெண்கள் அணிவகுத்துப் போராட்டம் நடத்த தயாராகுங்கள்!

அடைந்தே தீருவோம் திராவிடநாடு!

---

### மதம் மாய்கிறது!

திருநெல்வேலி நகரசபை உறுப்பினர். தோழர் எ. அருணாசலம் அவர்களின் தீர்மானத்தின்படி முனிசிபல் பள்ளிக்கூடங்களில் மதசம்பந்தமான பாடல்களைப் பாடக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டு எல்லா பள்ளிக்கூடத்து தலைமை ஆசிரியர்களுக்கும் நோட்டீஸ் அனுப்பட்டுள்ளது.

### "திராவிட நாடு"

சிவாஜி நாடகம் காரணமாக 16-12-45 திராவிடநாடு இதழ் வெளிவர முடியவில்லை. இக்கிழமை எழுத்துக்கள் பதிப்பிக்கவேண்டியிருப்பதால் 23-12-45 இதழும் நிறுத்தப்பட்டது. ... 30-12-45ல் வெளிவரும்.

## சென்னையில் கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை வேண்டுகோள்!

சென்னை சிந்தாதிரிப்பேட்டை திராவிட கழகத்தின் (ஜஸ்டிஸ்)சார்பாக நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் இசை உலக ஜோதி எம். கே. தியாகராச பாகவதர் விடுதலை வேண்டுகோள் கூட்டம் 18-12-45 மாலை 6 மணிக்கு சிந்தாதிரிப்பேட்டை நேபியர் பார்க்கில் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர்கள் பெருவாரியாக வந்திருந்தார்கள். பெரியார் ஈ. வெ. ரா., ஏ. பி. ஜனார்த்தனம், கே. அன்பழகன், குடந்தை கி. சின்னத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் கோபாலமூர்த்தி "கருணை காட்டுக" என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்து திருவிதாங்கூர் வி. எஸ். கிருஷ்ண பிள்ளை பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ. அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

---

### "தூக்குமேடை"

(மாணவர் எழுச்சி நாடகம்)

தோழர் மு. கருணாநிதி எழுதியது திராவிட மாணவர் பிரசாரக் கழகத்தாரால் புத்தக உருவில் விரைவில் வெளியிடப்படும். அச்சில் இருக்கிறது. விளம்பரங்கள் அனுப்புவோர் உடனே கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

வெளியிடுவோர்:

எஸ். தவமணிராசன்

திராவிட மாணவர் பிரசாரக் கழகம், ஈரோடு.

மதிப்புரை

### தமிழர் தன்மதிப்புப்பாடல்கள்

"குலங்கெடுத்த கோடரியைக்
கூசிடாமல் ஆழ்வாரென்றாய்!
மலையெடுத்த தோளனை நீ
மதியிழக்கே தூற்றுகின்றாய்!"

உணர்ச்சி கொப்பளிக்கும் பாடல்கள் பல பகுதி வாரியாகப் பிரிக்கப்பட்டு கூட்டங்களில் பாடுவதற்கேற்றமுறையில் தமிழர் தன்மதிப்புப் பாடல்களாக வெளி வந்துள்ளன. இயற்றியவர் புதுவைச் சிவம்! கேட்பானேன்! தமிழாறு பெருக்கெடுத்தோடுகிறது. திராவிட வீரம் பண்ணோடு கலந்து உள்ளத்தைத் தடவுகிறது. விலை அணா ஆறுதான்! கிடைக்குமிடம்,

"ஞாயிறு நூற்பதிப்பகம்"

புதுச்சேரி.

## கருணை காட்டுக!

(கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்ற கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை மாநாட்டுக் கூட்டங்களில் தமிழ்மணிகள், கலைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன், இசை உலக ஒளி M. K. தியாகராச பாகவதர் இருவரையும் கருணை காட்டி விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

o o

சேலம் அம்மாபேட்டை கிராம பஞ்சாயத்து கோர்ட்டில் 14-12-45ல் தோழர் பி. எல். பழனிசாமி செட்டியாரால் கொண்டு வரப்பட்ட "கிருஷ்ணன் பாகவதருக்கு கருணை காட்டுக" என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

* *

கரூர் முனிசிபல் கௌன்சில் 19-12-45ல் சேர்மேன் தோழர் சின்னுசாமி தலைமையில் நடந்த கௌன்சில் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

o o

கும்பகோணத்தில் 17-12-45ல் நடைபெற்ற முனிசிபல் கௌன்சில் கூட்டம்.

* *

நாகையில் தோழர் டி. கே. விசயராகவலு தலைமையில் 11-12-45ல் நடைபெற்ற தன்மதிப்புக்கழகக் கூட்டம்.

o o

சுவாமிமலை இளைஞர் இலவச வாசகசாலை சார்பில் 29-11-45ல் தோழர் சிங்காரவேலு தலைமையில் நடந்த கூட்டம்.

o o

திண்டிவனத்தில் 12-12-45 அன்று தோழர் ஆ. பழனிசாமி சிவாச்சாரி தலைமையில் நடந்த பொதுமக்கள் கூட்டம்.

* *

சேலம் அம்மாபேட்டையில் 14-12-45ல் ஜஸ்டிஸ் தமிழர் சங்க சார்பில் நடந்த கூட்டம்.

* *

மதுரை சந்தைப்பேட்டை அண்ணாத்துரை இலவச வாசகசாலை சார்பில் 10-12-45 மாலை தோழர் கே. எஸ். ராசமான் தலைமையில் நடந்த கூட்டம்.

வேலூர் பெருமுகை கிராமத்தில் 13-12-45ல் நிகழ்ந்த பொது நெறிக்கழக கூட்டம்.

o o

மாயவரத்தில் 6-12-45ல் நிகழ்ந்த திராவிட மாணவர் கழகக்கூட்டம்.

* *

கூறைநாடு திராவிடர் கழக சார்பில் 16-12-45ல் நடைபெற்ற கூட்டம்.

* *

அருப்புக்கோட்டையில் 9-12-45ல் நடைபெற்ற சாலியர் மகாஜனவாலிபர் சங்க கூட்டம்.

o o

சாத்தூரில் 30-11-45ல் நிகழ்ந்த விஸ்வகர்ம வாலிபர் மன்றம்.

* *

செங்கம் திராவிடர் கழக சார்பில் 17-12-45ல் நிகழ்ந்த கூட்டம்.

o o

கிருஷ்ணகிரி தாலுகா பழைய பேட்டையில் 14-12-45ல் நடைபெற்றவிஸ்வ பிராமண மகாஜனங்கள் பொதுக் கூட்டம்.

o o

கரூர் திராவிடர் கழக சார்பில் தோழர் சி. கோவிந்தராசன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

o o

தஞ்சையில் 18-12-45ல் தோழர் டி. வி. ரெத்தினசாமி பிள்ளை தலைமையில் நடைபெற்ற மாபெரும் சர்வகட்சி பொதுக்கூட்டம். சென்னை கவர்னருக்கும் வைஸ்ராயிக்கும் தீர்மானம் அனுப்பப்பட்டது.

* *

சென்னை பவழக்காரத்தெரு திராவிட இளம் பேச்சாளர் கழக சார்பில் தோழர் மு. பழனிசாமி தலைமையில் 9-12-45ல் நடந்த கூட்டம்.

## டி. எஸ். இராசகோபால்

திருவாரூர் தோழர் டி. எஸ். இராசகோபால் படந்த $1\frac{1}{2}$ மாதங்களாக கடுமையான "டைபாயிட்" ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு தற்பொழுது சேலத்தில் டாக்டர் பி. எஸ். துரைசாமியிடம் சிகிச்சை பெற்று குணமடைந்து வருகிறார். கவிஞர் பாரதிதாசன், ப. கண்ணன், டி. என். ராமன் ஆகியோரும் மற்றும் பல தோழர்களும் பார்த்துச் சென்றனர்.

## இறுதிக்கடன்

16-12-45 ஞாயிறு கள்ளப்பிரம்பூர் சமதியக்கத் தோழர் துரை வையாபுரி நாட்டார் தந்தை ப. பொன்னுசாமி நாட்டார் அவர்களின் இறுதிக்கடன் தோழர் ஆர். ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்று தோழர்கள் எஸ். ஆர். சுப்பண்ணா, கரந்தை புலவர் வி. ஏ. அரங்கசாமி, வித்துவான் கே. சின்னையா, மா. வேணுகோபால், சோலையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஏழைகட்கு உணவளிக்கப்பட்டது. குடி அரசுக்கு 1ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

திருச்சி மாநாட்டில் சிறப்பாக வேலை செய்த
"நேஷனல் ரேடியோ" ஒலிபெருக்கியை
ஏற்பாடு செய்யுங்கள்.

**நேஷனல் ரேடியோஸ்,**
99, பெரிய தெரு, கும்பகோணம்.



அன்பர்களுக்கு அறிவிப்பு

**4-12-45ல் ஒரு தோழர் எழுதிய கடிதம்**

அன்புள்ள, ஐயா அவர்களுக்கு வணக்கம். தங்களுடைய காயசுத்தி லேகியம் சாப்பிட்டு நல்ல குணம். இப்போது வயிற்றுவலி இல்லை. என் வயிற்றுவலி குணமானதைக்கண்டு அநேகர் சந்தோஷம் கொள்ளுகிறார்கள். எனது நண்பர் ஒருவர் வயிற்றுவலியால் அதிகக் கஷ்டப்படுகிறார். இந்த P. C. கண்டதும் $\frac{1}{2}$-சேர் காயசுத்தி லேகியம் அனுப்பும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிக்கு உங்கள் அன்பை மறவா,

P. K. PAUL, 51, Gilberts Block,
MARIKUPPAM (K.G.F.)

குன்மம், குடல்வாதம், மலச்சிக்கலுக்கு அற்புத மருந்து

**ஜெயராம் காயசுத்தி லேகியம்**

1-சேர் ரூ. 4. $\frac{1}{2}$-சேர் ரூ. 2-2-0. V. P. P. வேறு

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

# பகுத்தறிவு— அணுக்குண்டு சக்தி

[சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் 15-12-45ல் நடைபெற்ற சென்னை மாவட்ட 6-வது "சுயமரியாதை" மாநாட்டில் குடந்தை தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமைவகித்துப் பேசிய பேருரையின் சென்றவாரத் தொடர்ச்சி]

★

நமது "சுயமரியாதை" இயக்கத்தின் உயரிய கருத்துக்களை நம் உணர்த்துதலினால் உணர்ந்து நமதியக்கத்தைப் பின்பற்றுவதற்கு முற்படும் திராவிட மக்களை, நமதியக்கப் பொது எதிரிகளான பார்ப்பனர்களும், தன் உணர்வற்ற தன்மையினால் அவர்களின் வால்பிடித்துத் திரியும் நமதினக் கோடாரிக் காம்புகளும் நம்பேரில் கற்பிக்கும் முக்கிய குற்றச்சாட்டு, நாம் "கடவுளே" இல்லை என்று சொல்லும் நாத்தீகர்களென்பது. கடவுள் உண்டா? இல்லையா! என்னும் ஆராய்ச்சியிலிறங்கி வீண் பொழுது போக்க சுயமரியாதைக்காரருக்கு நேரமோ, அவகாசமோ இல்லையென்பது முதற் காரணம்; கடவுள் இருக்கிறாரா? இல்லையா என்று ஆராயப்புகுவது தூர்த்தகடு இல்லாத தண்ணீர் வாளியை கிணற்றுக்குள் விட்டு தண்ணீர் எடுத்து பாத்திரம் நிறைய நிறப்ப முயற்சியிலீடுபடும் மந்தனின் மதிபோலாகும் என்பதை பிழையற நாம் உணர்ந்துகொண்டிருப்பது இரண்டாவது காரணம். ஆனால் கடவுளை என், மனதினால் எண்ணிக்கொள்ளுகிறேன் என்று சொல்லும் எவரிடமும் நமக்கு எவ்வித தகாறுமில்லை. கண்ணினால் காண இயலாத கடவுளைக் காரணமாகச் சொல்லி அதை ஆணென்றும், பெண்ணென்றும்; கல்லாலும், உலோகத்தாலும், மரக் கட்டைகளாலும், சிலைகளாகச் செய்து அது குடியிருக்க ஆலயமமைத்து, அதற்கு பெண்டு, பிள்ளைகளையும் போதாவகைக்கு கூத்தியாரையும் சேர்த்துவைத்து, பள்ளியறையும், பாலும் பழமும் எற்படுத்தி, போனவருடம் கட்டிய தாலி என்னவாயிற்று என்று சிறிதும் எண்ணிப் பாராமல் வருடாவருடம், புதிது புதிதாக திருக்கலியாண உற்சவமென்பதாக நடத்தியும் மற்றும் கோவிலில் உள்ள பெண் சாமிகளுக்கு அர்ச்சகனுடைய பெண்டாட்டியைவிட்டு குளிப்பாட்டச்செய்யாது, ஆணாகிய அர்ச்சகனே அதன் அந்தரங்க பாகத்தையெல்லாம் தொட்டு குளிப்பாட்டுகிறானே என்று பெண் சாமிகளின் மான உணர்ச்சிபற்றி எந்த ஆண்சாமியும் எந்தவித மான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாக இல்லையே. ஆனால் கல்லாலும், செம்பாலும், மரக்கட்டையாலும் செய்யப்பட்ட சாமி சிலைகளுக்கு உணர்ச்சியிருக்க முடியுமென்று கடுகளவு அறிவுள்ள எந்த மனிதனும் எண்ணமுடியாதுதான். ஆனால் கோவில்கள் தோன்றிய காலம் முதல் அறிவுள்ளவர்களாய், சாமி பக்திக்கே பீடமாக மதிக்கப்படுகிறவர்களாய், கோவில் நிர்வாகத்தை நடத்திவைக்கும் தர்மகர்த்தாக்களும் பெண் சாமிகளின் மான உணர்ச்சிபற்றி என் சிந்தியாது போனார்கள் என்பது ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா? அப்பேர்ப்பட்ட அர்த்தமற்ற சாமிகளுக்கு தேரென்றும், திருவிழாவென்றும், பொதுமக்களின் எல்லையற்ற பணத்தை கோவிலின் பெயரால் சூரையாடி வருவதின் பயனாய் அப்பணத்தின் உதவிகொண்டு சோம்பேறிப் பார்ப்பனக் கூட்டம் தானும் தன் இனமுமாக உண்டு கொழுத்து தொந்தி பெருத்து திரிவதை உணராதவர்களுக்கு உணர்த்துவதுதான் சுயமரியாதை இயக்கத்தின் உண்மைத் தத்துவம்.

திராவிடத் தோழர்களே!
வாலிப சீவ இரத்தினங்களே!

மனித அறிவின் சிகரம், ஆராய்ச்சியின் நிறைவு என்று சொல்லத்தக்க நமது "பெரியார்" அவர்கள் தம் முதிர்ந்த பருவத்தையும், தளர்ந்த உடலையும் பொருட்படுத்தாமல், அலுப்படையாமல், எதிர்ப்புக்கஞ்சாமல், இளஞ்சிங்கம்போன்று இன்னும் உழைத்து இளைஞர்களைத் தட்டி எழுப்பி களத்தின் முன்னணியில் நிறுத்தி தலைமைதாங்கி போர்நடத்தி வருகிறார். "பெரியார்" அவர்களின் குறிப்பின்படி நாம் நமது தொண்டை செய்யப் புகுங்கால், நமதியக்கத்தின் உயர்வான நோக்கத்தை, அசாக்கிரதையினாலோ, சந்தர்ப்பக் குறைவினாலோ பிறர் சொற்கேட்ட வெறுப்பினாலோ தன் நிலைமையை சரிவர உணராத நமதின மக்களுக்குள் பலர் நம்மைப் பார்த்து உங்கள் கொள்கையை உலகில் ஒரு சிலர்தானே அனுட்டிககிறார்கள், பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற அசட்டு மொழி பகர்ந்து நமது ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தளர்த்த வழிகோலுவார்கள். அப்படி சொல்லுபவர்களிடம் உலகில் மாணிக்கட்டிகளதிகமா? மண்ணாங்கட்டிகளதிகமா? மாணிக்கக்கட்டிகள் ஊருக்கு ஊர் குறைந்த அளவில்தானிருக்கும். எண்ணிக்கை சொற்பம் காரணமாக மாணிக்கங்களுக்கு மதிப்பு குறைந்துவிட்டதாக எங்கேயாவது கேள்விப்பட முடிகிறதா? இல்லையே. எங்கள் உள்ளத்தில் ஊறும் இன உணர்ச்சியின் காரணமாக நாங்கள் கண்ணுறும் மக்களில் தன்னுணர்வற்ற காரணமாக மண்ணாங்கட்டி போல் தோன்றும் நமதின மக்களையெல்லாம், பகுத்தறிவுபெற்ற மாணிக்கக்கட்டிகளாக்கும் சுயமரியாதைத் தொண்டில் எங்களை ஈடுபடச் செய்திருக்கிறது என்று அழுத்தம் திருத்தமாக சொல்லுவதுடன், புராண ஏட்டில் காணுகிறவாறு அநேக ஆயிர வருடகாலம் பூமியில் கல்லாய்க் கிடந்த "அகலிகை" என்ற பெண் சாதாரண மனிதனாகிய ராமன் என்பவனின் கால்பட்ட மாத்திரத்தில் அழகிய பெண்ணுருவானாள் என்ற பொய்க் கதையை நம்பிவரும் இந்நாட்டில் எங்கள் பகுத்தறிவின் சுடரால் மண்ணாங்கட்டிகளெல்லாம் மாணிக்கக் கட்டிகளாக ஏன் ஆகாது என்று தைரியமாகக் கேளுங்கள். உலகில் நமது முற்போக்கை தடைப்படுத்த முன்னிற்கும் எதிரிகளோ அநேகர். உதாரணமாக பணக்காரன் ஏழை, படித்தவன், பாமரன், ஏமாற்றுக்காரன், ஏமாறுகிறவன், சாதியில் உயர்ந்தவன், தாழ்த்தப்பட்டவன் இவ்வாறு பலருண்டு. ஆனால் நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. எப்படியெனில் இன்றைய உலகில் விஞ்ஞான அறிவின் தற்போதைய எல்லையாக மதிக்கப்படுகிற "அணுக்குண்டின்" தன்மையைவிட அதிகம் சக்திவாய்ந்த "பகுத்தறிவு" என்னும் வலிய ஆயுதத்தை நமது "பெரியார்" நம் ஒவ்வொருவரிடமும் அளித்துள்ளார். அதன் துணைகொண்டு திராவிட தனிப்பெரும் பழமையை நிலைநாட்டல், ஆரிய அகந்தையை அழித்தல், தன்மான உணர்ச்சியை உணரச்செய்தல், தீண்டாமையைப் போக்குதல், பாட்டாளிகளின் துயர் துடைத்தல், திராவிட தனி ஆட்சி நிறுவுதல் ஆகிய அரும் பெரும் காரியங்களை செய்து முடிப்போமாக.

முடிவுரை

நமதியக்கம் தொடங்கிய அந்நாள்முதல் இன்றுவனர இயக்கக்கொள்கைகளைப் பின்பற்றி ஒழுகிவரும் நான் என் அறிவிற்கு தோன்றிய சில நுணுக்கங்களை இவ்வுரையில் தெரிவித்திருப்பதல்லாது இங்கு பெரும்பாலோராக குழுமியிருக்கும் நமதியக்க தோழர்களுக்கு தெரியாத அவ்வளவு அரும்பெரும் கருத்துக்களை நான் பிரமாதமாய் விளக்கிவிடவில்லை. ஆனால் இங்கு வந்திருப்போரில் நமதியக்கத்தில் பற்றுதல் கொள்ளாத நமதின மக்களோ, அல்லது நம் கொள்கை பரவுதலைக் கண்டஞ்சும் சுயநலமிகளான பிறர்கள், சிலரோ, பலரோ வந்திருப்பின் அவர்களும் தங்கள் கருத்துக்களை

திருத்திக்கொள்ள இவ்வுரை உதவி செய்யாதா என்ற என் ஆசைப்பெருக்கினால் தெரிவித்ததல்லாமல் வேறில்லை. நமது "பெரியார்" அவர்களின் கட்டளைப்படி உலகில் இதுவரை நாம் செய்திருக்கும் தொண்டு சொற்பம். எதிர்காலத்தில் செய்துமுடிக்கவேண்டியது அதிகம் உள்ளன. ஆகையால் நம்முன் இப்போது நிகழவிருக்கும் மாநாட்டில் நமதியக்க தீவிர முற்போக்கிற்குத் தக்க தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை உடனே அமுலுக்கு கொண்டுவரத்தக்க முயற்சிகளில் ஈடுபடவேண்டியது நமது கடமை. எனது உரையிலுள்ள குற்றங்களைக் களைந்து குணத்தை கைக்கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"வீழ்க ஆரியமென்னும் பார்ப்பனீயம்"

"வாழ்க திராவிடம்"

---

11-11-45 ஞாயிறு அன்று மாலை 6 மணிக்கு பெண்ணாகடம் சிவகுருநாதன் கழகத்தின் சார்பில் கழகக் தலைவர் தோழர் செ இராதா கிருட்டினன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

## அறிவிப்பு

1-12-45 முதல் "குடி அரசு" "ஜஸ்டிசைட்" பத்திரிகைகளை மதுரையில் விற்பனைசெய்ய தோழர் எம். எஸ். ராமய்யா அவர்களை நமது ஏஜண்டாக நியமனம் செய்திருக்கிறோம். பத்திரிகைகள் ஏஜண்டிடம் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:- எம். எஸ். ராமய்யா,
31, வெங்கடபதி அய்யங்கார் தெரு,
ராமநாதபுரம் ரோடு.

மானேஜர்.

---

## மணமகள் தேவை

மணமகள் செகண்டரி கிரேட் பாஸ் செய்தவராக இருக்கவேண்டும். குணம், நல்நடத்தை உள்ளவராக இருத்தல் நலம். திராவிடர் கழக கொள்கைகளை அனுசரிப்பவராக இருக்கவேண்டும். எந்த மதம் சாதியாக இருந்தாலும் கவலை இல்லை. திருமணம் பதிவு முறையில் நடைபெறும். வயது மணமகன் 25, ஹையர் கிரேட் பாஸ்செய்து தஞ்சை மாவட்டத்தில், ஜில்லாபோர்டு பாடசாலை தலைமை ஆசிரியராகவுள்ளார். சொத்து ரூ. 10000 (பத்தாயிரம்) இருக்கிறது. திராவிடர் கழக கொள்கைகளை அனுசரிப்பவர். கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும். 0-1-6 (தபால்தலை) அனுப்பி விபரம் அறிக.

முகவரி: எஸ். இளங்கோவன், C/o தலைமை ஆசிரியர், போர்டு ஆண்பாடசாலை, சீர்காழி, தஞ்சை மாவட்டம்.

ய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடநாட்டுச் செய்திகள்

பூகளூர் தேவேந்திர வேளாளர் வாலிபர் சங்கக் கூட்டம் தோழர் ஏ. பாலமுத்து தலைமையில் 7-11-45-ல் நடைபெற்றது.

* *

சென்னை இரட்டைமலை சீனிவாசன் நினைவுக் கழக இலவச பாடசாலையின் கூட்டம் 3-11-45-ல் தோழர் எஸ். சண்முகம் பிள்ளை தலைமையில் நடைபெற்று பலர் பேசினார்கள்.

* *

சமுத்திரம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் கூட்டம் 8-11-45-ந் தேதி கூடிற்று. பூனா ஒப்பந்தத்தைக் கண்டித்துப் பேசப்பட்டது.

* *

வேலங்குடி தாழ்த்தப்பட்டோர் கழகத்தில் தோழர் அரங்கராசு தலைமையில் 27-10-45 இரட்டைமலை சீனிவாசன் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஜி. என். சாமி, ஆ. சிவ ராமசாமி, முருகேசன் ஆகியோர் பேசினர். அன்று மாலை தோழர் ஆ. சிவ ராமசாமி தலைமையில் பூனா ஒப்பந்த எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

* *

திருச்சி மருத்துவர் சங்கக் கூட்டம் 27-10-45-ல் தோழர் பபூன் எம். எஸ். சண்முகம் தலைமையில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேறின.

* *

வேலூர் 18-10-45 ஞாயிறன்று மாலை செங்கொடிகளுடன் திராவிட மாணவர்கள் "பெரியார் வாழ்க" "திராவிடநாடு திராவிடருக்கே" என்பன போன்ற பேரொலியுடன் ஊர்வலம் வந்தனர். திராவிடர் கழகச் சார்பில் போலீஸ் மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது, தோழர் கி.கி. மாரியப்பன் தலைமையேற்றார். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், பி. கே. ஐயா, எஸ். கருணானந்தம் ஆகியோரும் மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினர். இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

* *

பொள்ளாச்சி 22-11-45-ந் தேதி இரவு 9 மணிக்கு சங்கத் தலைவர் தோழர் திருமூர்த்தி தலைமையில் அருந்ததியர்கள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சின்னையன், பி. என். இராமானுசம், திருமூர்த்தி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

மருதங்குடி ஆதிதிராவிட பொதுக் கூட்டம் 19-11-45-ல் தோழர் பி. ஆர். ஏ. சங்கரன் தலைமையில் நடந்தது. இரட்டைமலை ஆர். சீனிவாசன் மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

கூடலூர் பகுத்தறிவுக் கழக சார்பில் தோழர் வேலு தலைமையில் 2-12-45 ஞாயிறு மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பொ. தியாகராசன் ஆ. திராவிடமணி ஆகியோர் விரிவுரையாற்றினர்.

* *

26-11-45-ந் தேதி மாலை சேலம் முனிசிபல் கல்லூரி மாணவர்களால், அக் கல்லூரியைவிட்டு விலகி ஓய்வு எடுத்துக் கொள்ளும் தருக்க (Logic) ஆசிரியர் தோழர் ஜி. சாமுவேல் அவர்களுக்கு ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. அவ்வமயம் கல்லூரித் தலைவர் தோழர் ஏ. இராமசாமிக் கவுண்டர் எம்.ஏ.எல்.டி. தலைமை வகித்தார். பிரிவுபசாரப் பத்திரம் மாணவர்களின் சார்பாக தோழர் தேவநேயப் பாவாணர் பி. ஓ. எல். அவர்களால் வாசித்தளிக்கப்பட்டது. அதன் பிறகு திம்மப்பய்யர், மோகன்தாஸ், வை. திருநாவுக்கரசு, ஹகீம் இன்னும் பலர் உரையாற்றினர். கடைசியாக கல்லூரியின் சார்பாக தோழர் ஜி.எச். கோதண்டராமன் வந்தனோபசாரம் கூறக்கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

o o

கள்ளக்குரிச்சியில் 16-11-45-ல் நடந்த வன்னிய குல க்ஷத்திரிய வாலிப சங்கத்தில் தோழர் தங்கவேல் பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் ஷை இனத்தார் எந்தக் காரியத்திற்கும் இனி பார்ப்பனனை அழைப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

o o

பெரம்பூர் செம்பியம் ஆதிதிராவிடக் கல்வி அபிவிருத்திக் கழகத்தின் சார்பாக 25-11-45 மாலை தோழர் சத்தியவாணிமுத்து தலைமையில் பூனா ஒப்பந்த எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

o o

கொளும்பு கொள்பெட்டி சென்மைக் கல் பாடசாலை மண்டபத்தில் 21-11-45 தோழர் டி. எஸ். தங்கையா தலைமையில் திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்க இலங்கைக் கிளையின் கூட்டம் நடைபெற்றது.

o o

சென்னை, மூலக்கொத்தளத்தில் 25-11-45 காலை தோழர் டி. சண்முகம் தலைமையில் நடந்த முத்து கல்வி கழகத்தின் கூட்டத்தில் தோழர்கள் அன்பழகன், என். வி. நடராசன், பொன்வேல், எஸ். வி. கணேசன், ஈ. கே. மணவாளன் ஆகியோர் பேசினார்கள்,

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.